Term 3 Model FA(A) Question

7th Standard

Date : 11-Jan-19

**அறிவியல்**

Reg.No. : | | | | | | |

Time : 02:30:00 Hrs

Total Marks : 60

பகுதி-அ

10 x 1 = 10

I.சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

1) ______ இது ஓர் இயற்கைச் சூழ்நிலை மண்டலத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

(a) நெல்வயல் (b) பாலைவனம்

2) உணவுச் சங்கிலியின் மூன்றாவது நிலையில் _____ அமைந்துள்ளன.

(a) தாவர உண்ணிகள் (b) ஊன் உண்ணிகள்

3) ______ என்பது நீரின் வாயு நிலையாகும்.

(a) மழை (b) நீராவி

4) _____ நீரைக் குடிநீராக மாற்றுவதற்குச் செயற்கைமுறையில் உப்பு நீரைக் குடிநீராக்கும் திட்டம் பயன்படுகிறது.

(a) கடல் (b) ஆற்று

5) எரிபொருள்கள் எரியும்போது ஒளியுடன் வருவது

(a) வெப்பம் (b) ஒளி (c) காற்று (d) மேற்கூறிய ஏதும் இல்லை.

6) _________ என்பது எரிதலுக்கு நன்றாகத் துணை புரியும்.

(a) ஆக்ஸிஜன் (b) கார்பன்-டைஆக்¡ஸடு (c) நைட்ரஜன் (d) ஹைட்ரஜன்

7) அஜய் சமதள ஆடியிலிருந்து 1 மீட்டர் தொலைவில் நிற்கின்றான். அவன் ஆடியை நோக்கி 50 செ.மீ. நகருகின்றான். இப்போது அஜயிக்கும் mtdJ பிம்பத்திற்கும் இடைப்பட்ட தொலைவு

(a) 50 செ.மீ (b) 2 மீ. (c) 3 மீ (d) 1 மீ

8) பின்வருவனற்றில் மெய் பிம்பத்தையும், மாயப் பிம்பத்தையும் உருவாக்குவது எது?

(a) சமதள ஆடி (b) குழி ஆடி (c) குவி ஆடி (d) மேற்கூறிய எல்லாம்

9) S.I அளவீட்டு முறையில் வெப்பநிலையின் அலகு

(a) செல்சியஸ் (b) ஃபாரன்ஹீட் (c) ஜூல் (d) கெல்வின்

10) மனித உடலின் சராசரி வெப்பநிலை

(a) $36.9^0$C (அல்லது) $98.4^0$F (b) $38.4^0$C (அல்லது) $96.4^0$F (c) $39.6^0$C (அல்லது) $94.8^0$F (d) எதுவுமில்லை

II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

5 x 1 = 5

11) பல உணவுச் சங்கிலித் தொடர்களின் வலை ------எனப்படும்.

12) எண்ணெய்யால் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்த _______ பயன்படுகிறது.
(தண்ணீர் / ஃபோமைட்)

13) பொருள் ஒன்று பெற்றுள்ள வெப்ப ஆற்றலை அளவிடப் பயன்படுவது
(வெப்பநிலை / அழுத்தம்)

14) சினிமாத் திரையில் பெறப்படும் பிம்பம் _______ (மெய் பிம்பம் / மாயப் பிம்பம்)

15) ஒளி பொருள்களின் மீது பட்டுத் திருப்பி அனுப்பப்படும் செயல் ----------- எனப்படும்.

III பொருத்துக

5 x 1 = 5

16) கருப்புக் கரடி (1) ஓக்

| | |
|---|---|
| 17) இலையுதிர் காடுகள் | (2) $100^0C$ |
| 18) மஞ்சள் நிறச்சுடர் | (3) இலையுதிர் காடுகள் |
| 19) காகிதம் எரிதல் | (4) ஒளிரும் சுடர் |
| 20) தூய நீரின் கொதிநிலை | (5) எரிதல் |


## விடையளி : 10 x 3 = 30

21) காடுகளை அழிப்பதனால் பின்வருவனவற்றிற்கு ஏற்படும் விளைவுகளை எழுதுக

அ) காட்டு விலங்குகள்

ஆ) சுற்றுச்சூழல்

22) காடுகளில் உள்ள உணவு வலை கொடுக்கப்பட்டுள்ளது:




அ) மேலே உள்ள உணவு வலையைப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை இனங்காண்க

i) ஊன் உண்ணி

ii) தாவர உண்ணி

iii) உற்பத்தியாளர்

ஆ) நான்கு வகையான ஊண் உண்ணிகளை, உணவு வலையிலிருந்து தேர்ந்தெடுத்து, அதுபோல் எத்தனை வகை உணவு சங்கிலிகளை உங்களால் வரைய முடியும்?

23) உயிர்க்காரணிகளின் வகைகளை விவரிக்கவும்.

24) உங்கள் பள்ளி நண்பர்களுக்கு நீரைச் சேமிப்பதற்கான யோசனையைக் கூறுக.

25) மழை நீர் சேமிப்பு குறித்து அறிய கீழ்க்கண்ட இடங்களைப் பார்வையிடவும். பின்னர் அதன் முக்கியத்துவத்தைப் பட்டியலிடவும்.

அ. ஆலயம்

ஆ. பள்ளிக் கட்டடம்

இ. அரசு அலுவலகம்

ஈ. வீடு

26) நெமிலி உப்புநீர் குடிநீராக்கும் திட்டத்தை விவரி.

27) எண்ணெயால் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்த நுரைப்பான் (ஃபோமைட்) பயன்படுத்தப்படுகிறது. நீரை ஏன் பயன்படுத்தக்கூடாது?

28) கீழே கொடுக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் பண்புகளை, அதன் கீழ் உள்ள வினாக்களைக் கொண்டு விவாதித்து, நாம் பயன்படுத்துவதற்கான சிறந்த எரிபொருளைத் தேர்ந்தெடுக்கவும்.

எரிபொருள்கள்

1. கரி 2. பெட்ரோல் 3. ஹைட்ரஜன் வாயு

i)இந்த எரிபொருளை எரித்தால் எவ்வளவு வெப்பம் வெளிவிடும்?

ii)இது சுற்றுச் சூழலில் மாசுபாட்டை ஏற்படுத்துகிறதா?

iii)இது எளிதில் கிடைக்கக்கூடியதா?

iv)இதனை எளிதில் சேமித்து வைக்கவும்.ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லவும் முடியுமா?

v)இதன் விலை என்ன?

29) நல்ல எரிபொருளின் பண்புகள் யாவை?

30) கீழ்வருவனவற்றிற்குக் காரணம் தருக.

குழி ஆடி மெய் பிம்பத்தை உருவாக்குகின்றது. ஆனால் குவி ஆடி மெய் பிம்பத்தை உருவாக்குவதில்லை.

*****************************************